தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-

மலர் 25

இதழ் 03

ஜீலை 2023

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்







## புதுப்பிக்கப்பட்ட பூமாலை வணிக வளாகங்கள் மற்றும் நுண் தொழில் நிறுவன நிதித் திட்டம் தொடக்க விழா








கலைஞர் 100

1924 - 2023



கலைஞர் 100

1924 - 2023

“தமிழகம் இன்று லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் புழங்கும் இடமாக மாறியுள்ளது. அதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் தான் காரணம். இதற்கு காரணமான பெண்களை பாராட்டுகிறேன்.”

“வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து, பாதுகாக்க வேண்டிய இடத்தில் பாதுகாக்கும் அமைப்பாக இருப்பதால் தான் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் புழங்கும் இயக்கமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாறியுள்ளன.”

“வங்கியில் உள்ள பணம் மக்களின் பணம். அதை செம்மையாக பயன்படுத்தி இன்று மணிமேகலை விருது பெறும் அளவுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ந்துள்ளன.”

- கலைஞர் மு.கருணாநிதி



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைத்துத் துறைகளிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களான உங்களை மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக சந்தித்து, எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் தருணம்தான் எனக்கு மகிழ்ச்சியானதாகும்.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய பெண்களைக் கூட இன்றைய தினம் முன்னோடி விவசாயிகளாகவும், தொழில் முனைவோர்களாகவும் மாற்றி அவர்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் பெற்றிட வைத்தது சுய உதவிக் குழு என்ற உன்னத இயக்கம்தான் என்றால் அது மிகையல்ல. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சின்னஞ்சிறு அமைப்பாக துவக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் இன்று பெற்றுள்ள வெற்றியானது பிற மாநிலங்களிலும் சுய உதவிக் குழு இயக்கம் தோன்றக் காரணமாக உள்ளது.

சுய உதவிக் குழு இயக்கத்தை உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வேளையில், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜுன் 3ஆம் தேதியை "சுய உதவிக் குழு தின"மாகக் கடைபிடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இது சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றிப் பயணத்தின் ஒரு மைல்கல்லாகும்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை (குறள் 594)

உறுதியான ஊக்கமுடையவர்களிடம் உயர்வும், பெருமையும் வழிகேட்டு செல்லும் என்ற குறள்மொழிக்கு சுய உதவிக் குழுவினர் என்றுமே பொருத்தமானவர்கள்தான். உங்களின் ஊக்கமும், அயராத உழைப்பும்தான் உங்களை பெருமைக்குரியவர்களாக மாற்றியுள்ளது. உங்களின் வெற்றிப் பயணம் மேலும் தொடர எனது வாழ்த்துகள்.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவது, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்திட உரிய ஆலோசனைகள் வழங்குவது, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து முடித்திட உரிய நடடிவடிக்கைகள் எடுப்பது என நமக்கு ஊக்கமளித்து வருகிறார். பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளாமல் தரமான பொருட்களை தயாரிக்க வேண்டும். "சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்கள் என்றாலே அது தரமானதாகத்தான் இருக்கும்" என்பதை மக்களின் மனதில் பதிய வைக்கும் வகையில் உங்களின் தயாரிப்புப் பொருட்கள் இருக்க வேண்டும்.

தற்போது கோடைக் காலம் முடிந்து மழைக்காலம் தொடங்கப் போகிறது. வான் தரும் கொடையான மழை நீரை சேமித்து வைக்கும் வழிமுறைகளை சுய உதவிக் குழுவினர் மேற்கொள்வதுடன், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், மரங்களை வளர்த்தல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,
(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

## அன்புள்ள சகோதரிகளே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மகளிர் நலம் நாடும் அரசின் திட்டங்களால் பெண்கள் இன்று பல்வேறு துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக சாதனைகள் பலவற்றைப் படைத்து வருகின்றனர். மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் அரசு தீட்டும் திட்டங்களை சிறிதும் தொய்வின்றி செயல்படுத்துவதில் நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பங்களிப்பு அளப்பரியது என்பது அனைவரும் அறிந்ததுதான்.

பல்வேறு சிறப்புகளையும் பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதமாக முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த தினமான ஜூன் 3ஆம் தேதியை சுய உதவிக் குழு தினமாக அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமகெல்லாம் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு நமது இயக்கத்தின் சார்பாகவும், உங்களின் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சின்னஞ்சிறு இயக்கமாக தோன்றிய சுய உதவிக் குழு இயக்கம் இன்று பெற்றுள்ள வெற்றி உங்களின் உழைப்பால் தான் கிடைத்துள்ளது. உங்களின் அயராத உழைப்பும், தளராத முயற்சியும்தான் இதற்கக் காரணம். இந்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள இன்னும் அதிகமாக நீங்கள் செயல்பட வேண்டும்.

ஒரு செயலில் ஈடுபடும்போது அச்செயலைப் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்தறிந்து முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை எனும்,

"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கச்
செல்வார்க்குச் செல்லாதது இல்" (குறள்– 472)

என்ற குறள் வரிகளுக்கேற்ப, சுய உதவிக் குழுவினரான நீங்கள் மேற்கொள்ளும் செயல்களின் தன்மையறிந்து ஈடுபட்டால் வெற்றி நிச்சயம்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் சுய உதவிக் குழுவினரான உங்களின் வெற்றிப் பயணத்திற்கு துணை நிற்கும். உங்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் நமது இயக்கத்திற்கு மேலும் மேலும் பெருமை சேர்ப்பதாக அமைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH | Tncdw State
www.Tncdw.org | Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்**

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

# உள்ளே...


| | |
|---|---|
| அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 7 |
| முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை வெளியிடுதல் | 8 |
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு | 14 |
| கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சி | 16 |
| பெண்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர்... | 19 |
| முளைகட்டிய பச்சைப் பயறு தோசை | 28 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 03 • ஜூலை 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ.இ. பத்மஜா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# பெருகும் மக்கள்தொகையும்... பெரும் பிரச்சனைகளும்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

கடும் கோடை வெப்பத்தால் கல்வி நிறுவனங்கள் சற்று காலம் கடந்து திறக்கப்பட்ட நிலையில் உங்கள் பிள்ளைகளை பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் மகிழ்ச்சியோடு அனுப்பி வைத்திருப்பீர்கள். பள்ளியில் சேரும் வயதுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கல்வி நிறுவனங்களிலும் சேர்க்கைக்கான இடப்பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

நமது நாடு மக்கள் தொகை பெருக்கத்தில் உலகிலேயே முதல் இடத்தை பிடித்திருக்கிறது. மனித இனம் பெருகி வருவது மகிழ்ச்சியாக இருந்தாலும், அளவிற்கு அதிகமாக மக்கள் தொகை பெருகி வருவது வருத்தப்படக்கூடிய சூழ்நிலையே அமைந்துள்ளது. வானத்து விண்மீன்கள் போன்றும், கடற்கரை மணல் போன்றும் எண்ணிலடங்கா மக்கள் தொகை உருவெடுக்கும்போது, கூடவே பெரும் பிரச்சனைகளும் ஆபத்துகளும் உருவெடுத்து இந்த அழகிய உலகை பாழ்படுத்தும் நிலை உருவாகி வருகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மக்கள் தொகை பெருக்கத்தால் உணவு பற்றாக்குறை ஏற்படும், வறுமை தாண்டவமாடும், வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டு அதன் காரணமாக திருடு, கொள்ளை, கொலை போன்ற பிரச்சனைகள் உருவெடுக்கும். உணவு உற்பத்தி செய்யக் கூடிய நிலங்கள் மனிதர்கள் புழங்கும் இடங்களாக மாறும். இதனால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு மனிதர்கள் குடியேறும் நிலை ஏற்படும். காடுகள் அழிக்கப்படுவதால் பருவமழை பொய்த்து வறட்சியால் விவசாயம் பாதிக்கப்படும், அதோடு, புவி வெப்பமடைந்து பருவநிலை மாறி மனித குலத்திற்கே சவாலாக அமைந்துவிடும். இவையனைத்தும் பெருமளவில் ஏற்படும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளோம்.

இவ்வாறான கோர்வையான பிரச்சனைகளுக்கு காரணமாக உள்ள மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுக்குள் கொண்டு வருவது நம்முன் இருக்கும் பெரும் சவாலாகும். மக்கள் தொகை இயற்கையாகவே குறைவதற்கான சாத்திய கூறுகள் உள்ளன என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அதாவது புயல், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், எரிமலை போன்ற இயற்கை சீற்றங்களாலும் நாடுகளுக்கிடையே ஏற்படும் சண்டைகளாலும், விபத்துகளாலும், கொள்ளை நோய்களாலும், அவ்வப்போது மக்கள் தொகை கணிசமாக குறைந்து வரும் என கூறுகின்றனர். இவற்றையெல்லாம் பொய்யாக்கி இந்திய நாட்டின் மக்கள் தொகை விரைவாக பெருகி வருகிறது.

மக்கள் தொகையை குறைப்பதற்கு பெரும்பாலான உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. நமது அரசாங்கமும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது. பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இயற்கை முறையிலான குடும்பக் கட்டுப்பாடு முறையை கற்பித்து வருகின்றன. அனைத்தையும் விட மக்களாகிய நாம் முக்கியத்துவத்தை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




# அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.06.2023 அன்று சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 50,202 பயனாளிகளுக்கு ரூ.170.31 கோடி மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ்.இரகுபதி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் திரு. ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, திரு.எஸ்.ஆர்.பார்த்திபன், திரு.ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ.கார்மேகம், இ.ஆ.ப., சேலம் மாநகராட்சி ஆணையர் திரு. எஸ்.பாலசந்தர், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடுதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 09.06.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். உடன், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.பிரதீப் குமார், இ.ஆ.ப மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை வெளியிடுதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்த சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் யெலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய அளவில் முதலிடம் பெற்றமைக்காக ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினைப் பெற்றவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் 13.06.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள், நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்றதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்த நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., பிச்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பொ.மருதாசலம், பிச்சானூர் ஊராட்சி செயலர் திருமதி. வ.உமாமகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.5.16 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட 26 மாவட்ட பூமாலை வணிக வளாகங்களை திறந்து வைத்து, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி மதிப்பிலான நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. மு.க.ஸ்டாலின்

## அவர்கள் தொடங்கி வைத்தார்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 28.06.2023அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட 26 மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி மதிப்பிலான நுண் தொழில் நிறுவன நிதித் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் 5.60 லட்சம் ரூபாய் கடனுதவியாக வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவ்வணிக வளாகங்களுக்கு "பூமாலை வணிக வளாகம்" எனப் பெயர் சூட்டி திறந்து வைத்தார்.









அரியலூர், திருப்பூர் மற்றும் புதிய மாவட்டங்கள் நீங்கலாக 29 மாவட்டங்களில் பூமாலை வணிக வளாகங்கள் செயல்பட்டு வந்தன. பல ஆண்டுகளாக உரிய பராமரிப்பின்றி இருந்த இவ்வளாகங்களை சீரமைக்கும் பொருட்டு 29 வணிக வளாகங்களில் பெரம்பலூர் மாவட்ட வணிக வளாகம் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாலும், நாகப்பட்டினம் மாவட்ட பூமாலை வணிக வளாகம் முழுவதுமாக சேதமடைந்ததாலும், முதற்கட்டமாக இவற்றில் 26 மாவட்ட அளவிலான பூமாலை வணிக வளாகங்களை புனரமைத்து, பழுதுநீக்கம் செய்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 26 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

மேலும், கிராமப்புறங்களில் வாழும் மக்களை பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்திடும் வகையில், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் எனப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் நீங்கலாக 31 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மகளிர் நுண் தொழில் நிறுவனங்களை வலுப்படுத்தத் தேவையான புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், மகளிர் குழுக்களை தொழில் முனைவோராக உருவாக்கி, அந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கவும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டிற்கான வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் மானியக் கோரிக்கையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், வாழ்ந்து கட்டுவோம் திட்டத்தின் கீழ், இந்த நிதியாண்டில் மகளிர் புதிதாக தொழில் தொடங்குவதற்கும், ஏற்னவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவற்கும் 1000 கிராமங்களில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம்" ரூ.50 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்" என்று அறிவித்தார்.



அந்த அறிவிப்பிற்கிணங்க, இத்திட்டத்தின் தொடக்க நிகழ்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 10 மாவட்டங்களைச் சார்ந்த 10 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மொத்தம் 5.60 லட்சம் ரூபாய் கடனுதவியாக வழங்கினார். இந்த நிதியண்டிற்குள் 50 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் பயனாளர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்பட்டுவரும் வட்டாரங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆவர். குறைந்தபட்சம் 30 சதவிகித பயனாளிகள் மாற்றுத் திறனாளிகளாகவும், நலிவுற்றோராகவும் இருக்க வேண்டும். இவர்களின் தொழில் திட்டங்களின் அடிப்படையில் 70,000/- ரூபாய் வரை இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்படுகிறவருக்கு கடனுதவி வழங்கப்படும். மேலும், நுண் தொழில் நிறுவன நிதியுதவி பெறும் தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவையான தொழில் மேம்பாட்டுச் சேவைகளை மதி சிறகுகள் தொழில் மையத்தின் வாயிலாக பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி ஜெ. இ.பத்மஜா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பு 2023 நிகழ்ச்சி



வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்சார்பில்19.06.2023 அன்று திருச்சிராப்பள்ளி கோர்ட்யார்ட் மாரியட் ஹோட்டலில் நடைபெற்ற உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை துவங்கி வைத்து, உற்பத்தி பொருட்களை பார்வையிட்டு விழாப் பேருரை ஆற்றினார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் பொருட்களை வாங்கும் சந்தையாளர்களிடையே நட்புறவை வளர்ப்பதற்கும் உற்பத்தியாளர் சந்தையாளர் இடையே உள்ள இடைத்தரகர்களை தவிர்ப்பதற்கும் தமிழ்நாட்டின் உழவர்கள் மற்றும் அவர்களின் விளைபொருட்களின் சந்தையை மேம்படுத்தவும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

இந்த ஒருங்கிணைப்பு விவசாயப் பொருட்களை சந்தையுடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள ஒரு உறுதியான முன்முயற்சியாகும். உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் சந்தையாளர்களுக்கு தரமான பொருட்கள் கிடைக்கவும் வழிவகை செய்யும் இந்த உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பானது உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தவும் பொருட்களை விற்கவும் உற்பத்தியாளர் சந்தையாளர்கள் இடையே நேரடி இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் சந்தை வாய்ப்புகளை முழுமையாகப் பெற்றிடவும் வழி வகுக்கும்.

மேலும் வணிகத்தில் உள்ள இடைத்தரகர்களை தவிர்ப்பதன் மூலம் இடைத்தரப்பினருக்கும் இடையேயான விற்பனை பரிமாற்றுத் தொகையினை குறைவதோடு குறைந்த விலையில் உயர்ந்த தரமான பொருட்கள் மொத்தமாக கொள்முதல் செய்யவும் வழிவகை ஏற்படுகிறது இது தவிர உற்பத்தியாளர் சந்தையாளர்களிடையே வெளிப்படையான வணிகமும் நட்புறவும் உறுதி செய்யப்படுவதுடன் நீண்ட காலத்திற்கான பிணைப்பையும் ஏற்படுத்துகிறது.

இந்நிகழ்ச்சியில் திட்ட ஆதரவில் மூலம் உருவாக்கப்பட்ட 34 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளும் ஏற்கனவே இயங்கி வரும் 19 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளும் வரவழைக்கப்பட்டு 250 சந்தையாளர்களிடம் அறிமுகம் செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மற்றொரு முக்கிய அம்சமாக ஓரிட சேவை மையத்தின் மதி சிறகுகள் இலச்சினையை மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு, வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் ஊரக கடன்கள் துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்கள். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் இயங்கும் இந்த மையமானது ஊரகத் தொழில் நிறுவனங்களுக்கு தொழிற்சார்ந்த அனைத்து சேவைகளையும் வழங்குவதுடன் அவர்களின் தொழில் வெற்றிக்கு துணை நிற்கும். இரண்டு முதல் மூன்று கிராமங்களை ஒருங்கிணைக்கும் வகையில் தமிழ்நாட்டில் 42 இடங்களில் ஓரிட சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன இந்த மையங்கள் ஊரக பகுதிகளில் உள்ள தொழில் முனைவோருக்கு தொழில் திட்டங்களை வழங்குவதிலும் வெற்றியை தேடி தருவதிலும் முக்கிய பங்கு ஆற்றுகின்றன.

இந்நிகழ்வில், உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் மொத்தம் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள், பாரம்பரிய நெல் வகைகள், பருப்பு வகைகள், முந்திரி, மிளகு, மக்காச்சோளம், காய்கறிகள் மற்றும் பழ வகைகள் ஆகியவை விற்பனை செய்வதற்கும் கொள்முதல் செய்வதற்கும் உற்பத்தியாளர் மற்றும் சந்தையாளர்களுடைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன

இந்நிகழ்வின் முத்தாய்ப்பாக மாண்புமிகு இளைஞர்நலன்மற்றும்விளையாட்டுமேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதுடன், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பயனாளர்களின் ஊக்கமிகு வெற்றி கதைகள் அடங்கிய வெற்றி கதை புத்தகத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ,ப, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி ஜெ.இ.பத்மஜா, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரதீப்குமார் இஆ,ப., வணக்கத்திற்குரிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு, அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஆர்.வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி துணை மேயர், மாவட்ட ஊராட்சி தலைவர், விவசாயம், உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மண்டல தலைவர்கள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஆய்வு

திருச்சி, அரசு சையது முர்துஷா மேல்நிலைப் பள்ளியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.06.2023 அன்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து பார்வையிட்டு, அந்தப் பள்ளியின் கட்டடம், வகுப்பறை, மாணவர்களின் வருகைப் பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்து, மாணவர்களுடன் அமர்ந்து கலந்துரையாடி உணவு உட்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் உடனிருந்தார்.

## நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை விமலாம்பிகை திருமண மண்டபத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 4675 பயனாளிகளுக்கு ரூ. 34.66 கோடி மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.06.2023 அன்று வழங்கினார். முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழா அரங்கத்தில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிட்டு, அப்பொருட்கள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.பி.மகாபாரதி, இ.ஆ.ப.,மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு. நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ராஜகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.












# கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பதற்கான உயர்மட்டக் கண்காணிப்புக் குழு கூட்டம்

05.06.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்திற்கான மாநில கண்காணிப்புக் குழு, கொத்தடிமை தொழிலாளர்களின் விடுதலை மற்றும் மறுவாழ்வு, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பதற்கான உயர்மட்டக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் 15.06.2023 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிராமப்புற மகளிரின் வாழ்வாதாரம் சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கத்தை தோற்றுவித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் தோன்றிய சுய உதவிக் குழு இயக்கம் பெற்ற வெற்றி, பிற மாநிலங்களிலும் பின்பற்றப்பட்டு வரும் மகத்தான இயக்கமாக உருவாகியுள்ளது. சுய உதவிக் குழு இயக்கத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த தினமான ஜூன் 3ஆம் நாளினை “சுய உதவிக் குழு தினமாகக்” கடைப்பிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.




## “சுய உதவிக் குழு தினம்”

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் வங்கிக் கடன் நிதி உதவி,
பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழில்,
இளைஞர்களுக்கு திறன் பயிற்சி, மதி, போன்ற பல்வேறு திட்டங்களை தீட்டி
தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.






# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மகளிர் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், கடன் இணைப்பு மற்றும் தொழில் முனைவோராக்கி நிலைத்த நீடித்த வாழ்வாதாரம் பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி தொழில் மற்றும் வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவில் சாராஸ் கண்காட்சிகள் வாயிலாக ஆண்டுதோறும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் ஏராளமான மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதோடு, வாடிக்கையாளர்களும் தரமான பொருட்களை நியாயமான விலையில் கொள்முதல் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்கப்படுகிறது.

அதன்படி, கோடைக்காலத்தை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சி 03.06.2023 முதல் 18.06.2023 வரை சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் 03.06.2023 அன்று இக்கண்காட்சிக்கு வருகை தந்து, கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்ததுடன், பல்வேறு ஆலோசனைகளையும்










வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஜெ.இ.பத்மஜா, இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இக்கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான முந்திரிப் பருப்பு வகைகள், மசாலாப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், நாட்டுச் சர்க்கரை, சத்து மாவு, சுடுமண் சிற்பங்கள், கால் மிதியடிகள், பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், கண்ணாடி ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், பொம்மைகள், காபிப் பொடி, மிளகு, இயற்கை மூலிகைகள், செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பரிசுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மரச் சிற்பங்கள், இயற்கை உரங்கள், தேன், கடலை மிட்டாய், மூலிகை பொடிகள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் திருநங்கையர் சுய உதவிக் குழுக்களும் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத துணிப் பைகள், மஞ்சப் பைகள் விற்பனை செய்யும் அரங்குகளும், பாரம்பரிய சுவை மிகுந்த சிறுதானிய உணவுகளை உண்டு களித்திட உணவு அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

மேலும் இயற்கை முறையில் விளைவித்த காய்கனிகள் மற்றும் மலைப்பகுதிகளில் விளையும் பொருட்களின் விற்பனை சந்தையும் நடைபெற்றது. கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சிக்கு பொதுமக்கள் அதிக அளவில் வருகை தந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்களை மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றனர்.





# மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பங்களிப்பு...



### மகளிர் சுய உதவிக் குழு இயக்கம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர் சமூக, பொருளாதார மேம்பாடு அடைந்திட வேண்டும் என்ற உன்னத தொலைநோக்கு பார்வையுடன், இந்தியாவிலேயே முதன்முறையாக 1989ஆம் ஆண்டு பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவித் (IFAD) திட்டத்துடன் தர்மபுரியில் சுய உதவிக் குழு இயக்கம் தொடங்க வித்திட்டார்கள். தொடர்ந்து சுய உதவிக் குழு இயக்கத்தை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சென்றடையச் செய்திடும் வகையில், 1997ஆம் ஆண்டு மகளிர் திட்டம் என்ற பெயரில் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தி, அனைத்து மகளிர் வாழ்விலும் ஒளியேற்றினார்கள்.

### அன்னை தெரசா மகளிர் வளாகம்

சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடவும், மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் நடத்திடவும், மகளிர் திட்டத்திற்கு மகுடம் சூட்டும் வகையில், சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ. 15.32 கோடி மதிப்பீட்டில் 3 மாடி கட்டடத்தை கட்டி, அதற்கு "அன்னை தெரசா மகளிர் வளாகம்" என்று பெயர் சூட்டி, 01.11.2010 அன்று திறந்து வைத்தார்கள்.






### பூமாலை வணிக வளாகங்கள்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தி விற்பனை செய்திடும் வகையில் செயல்பட்டு வந்த 29 மாவட்ட ஊரக உற்பத்திப் பொருட்கள் விற்பனை வளாகங்களுக்கு 2000ஆம் ஆண்டு 'பூமாலை வணிக வளாகம்' என்று பெயரிட்டு சிறப்பித்தார்கள். மாவட்டம் முழுவதும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுகின்றன. சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கும், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் கண்காட்சிகளுக்கான பொருட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் இம்மையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### மணிமேகலை விருதுகள்

சிறப்பாக செயல்படக் கூடிய சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வண்ணம் 2006-2007ஆம் ஆண்டு மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் மணிமேகலை விருதுகளை அறிவித்து, 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிமேகலை விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மேன்மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும் விதமாக அமைந்துள்ளன.





### மாநில அளவிலான வங்கியாளர் விருதுகள்

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட மாநில மற்றும் மாவட்ட அளவிலான வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று 2008ஆம் ஆண்டு அறிவித்து, சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கும், வங்கிக் கிளைகளுக்கும் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

# பெண்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர்

தமிழ்நாடு அனைத்து திட்டங்களுக்கும் முன்னோடியாக இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் பெண்கள் கல்வி, பொருளாதாரம், சமூகத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர். இதில் முத்தமிழறிஞர் கலைஞர் பங்கு முதன்மையானது. எல்லா நிலைகளிலும் இருக்கும் பெண்கள் முன்னேற பல வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார். அனைத்துத் தளங்களிலும் பெண்கள் முன்னேற்றம் அடைய நல்ல திட்டங்கள் பலவற்றுக்கு கையெழுத்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

## பெண்களுக்குச் சொத்துரிமை!

பெண்களை ஓர் உயிராக மதிக்காமல் இருந்த குடும்பங்களை அதே பெண்கள் பெயரில் உயில் எழுத வைத்தவர். 1989 -ம் ஆண்டு தமிழ்நாட்டில், குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை இருக்கிறது என்னும் சட்டத்தை உருவாக்கியவர். 2020-ம் ஆண்டு, 'தந்தை இறந்தாலும் பெண்களுக்குச் சொத்தில் பங்கு இருக்கிறது' என தமிழ்நாட்டில் முதன்முதலில் எழுதப்பட்ட வரலாற்றை மீண்டும் ஒரு முறை எழுதியது உச்ச நீதிமன்றம்.

## பெண்கள் காவல் நிலையம்!

'பெண்களுக்கு ஆண்கள்தானே காவலாகயிருக்க வேண்டும்' என பாடம் எடுத்தவர்கள் மத்தியில் மகளிர் காவல் நிலையங்களை உருவாக்க 1973-ம் ஆண்டு விதை போட்டவர். அடுத்த ஆண்டு, பெண்கள் காவல் துறையில் இணைந்து பயிற்சி பெற்றனர். அவர்களின் முதல் அணிவகுப்பு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடந்தது. இந்திய அளவில் அதிக மகளிர் காவல் துறையினர் இருக்கும் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது.

## உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு!

1996-ம் ஆண்டு தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தார். கிராம, நகரப் பகுதிகளில் பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டது. பெண்கள் மீது அதிகாரம் செலுத்தியவர்கள் மத்தியில் பெண்கள் கையெழுத்திடும் அதிகாரம் வழங்கி அவர்களை அரியணையில் அமரவைத்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

## தர்மாம்பாள் கைம்பெண்கள் மறுமணத் திட்டம்!

திருமணம் முடிந்து கணவன் இறந்தால், பெண்கள் உடன்கட்டை ஏறவோ அல்லது தனித்து இருக்கவோ கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களின் உணர்வை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு இப்படியான இயற்கைக்குப் புறம்பான செயல்களைத் தவிர்த்து, கைம்பெண்கள் மறுமணம் செய்ய சட்டரீதியாக அங்கீகாரம் வழங்கி, அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் தர்மாம்பாள் கைம்பெண்கள் மறுமணத் திட்டத்தை 1975-ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இயற்றினார்.

## சாதி மறுப்புத் திருமணம்!

சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையிலும், அதேநேரம், சுயமாக வாழ தொடக்கக் காலத்தில் பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்திடவும் சாதி மறுப்பு திருமணம் செய்தவர்களுக்கு முத்துலட்சுமி ரெட்டி பெயரில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

## திருமண நிதி உதவித் திட்டங்கள்!

தமிழ்நாட்டின் ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காக 1989-ல் மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது. ஈ.வே.ரா மணியம்மையார் நினைவுத் திட்டத்தின் கீழ் ஏழை விதவையர்களின் பெண் குழந்தைகளின் திருமணத்துக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. அன்னை தெரசா நினைவுத் திட்டம் வாயிலாக 'ஆதரவற்ற பெண்கள் மற்றும் தாய், தந்தை இல்லாத பெண்களுக்கு' பொருளாதார வகையில் திருமணத்துக்கு உதவிட நிதி வழங்கப்படுகிறது.

பெண்களின் முன்னேற்றத்திற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தீட்டிய திட்டங்கள் ஒவ்வொன்றும் வைரங்கள்தான். அவைதான் தமிழகப் பெண்கள் வாழ்க்கையில் ஒளிர்ந்து வருகின்றன.

## தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் நிதி உள்ளாக்கம் ஆகியவற்றை வழங்கிட

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி

## ஆகியவற்றிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்




மகளிர் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் துணை அமைப்பான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (TNSRLM) வழிகாட்டுதலில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்களின் பொருளாதார சுயசார்பிற்கு வலு சேர்க்கும் வகையில் வங்கிக் கடன் இணைப்புகள் உள்ளிட்ட ஏராளமான கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை செயல்படுத்தி, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் இலக்கை எய்திடவும், சுய உதவிக் குழுக்களுக்கு விரைவாக வங்கிக் கடன் இணைப்புகள் பெற்றுத் தந்திடவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, 20.06.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி ஆகியவற்றிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் திரு. எம். மோகன் அவர்களும், கனரா வங்கியின் முதன்மைப் பொது மேலாளர் திரு. நாயர் அஜித் கிருஷ்ணன் அவர்களும் கையெழுத்திட்டனர். இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் துணைப்பொது மேலாளர் திருமதி. துர்க்கா தேவி, உதவிப் பொது மேலாளர் திரு. தீபக் குமார் திரிபாதி, மேலாளர் சுமதி, கனரா வங்கியின் பிராந்திய மேலாளர் திரு. ஜி. விஜயராகவன், மேலாளர் திரு. ஆர். உதயக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் திட்டத்தினால் கிடைத்த வெற்றி

"முயற்சி இருந்தால் விண்ணையும் எட்டலாம். முயற்சியுடன் பயிற்சியும் இருந்தால் வாழ்க்கையில் எதையும் சந்திக்கலாம், சாதிக்கலாம்" என மகளிர் திட்டம் மூலம் சாதித்துக் கொண்டே இருக்கும் திருமதி முருகேஸ்வரியிடம் அவரின் வெற்றிப் பயணம் குறித்து கேட்போமா!

"வணக்கம். என் பெயர் முருகேஸ்வரி, மாற்றுத் திறனாளியான நான் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டாரம், இறச்சகுளம் ஊராட்சி, அருள்ஞானபுரம் குக்கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது குடும்பம் ஒரு மிகவும் ஏழ்மையான குடும்பம். எனது கணவருக்கு ஒரு மாதத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் மட்டுமே வேலை இருக்கும். அதில் கிடைக்கும் குறைந்த வருமானத்தில் குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. மகனின் படிப்பிற்கான கல்வி கட்டணமும் என்னால் செலுத்த முடியவில்லை. என்ன செய்வது என்று கலங்கி கொண்டிருந்தேன்.


இந்நிலையில் 2002-ம் ஆண்டு பவளமல்லி சுய உதவிக் குழுவை ஆரம்பித்து அதில் ஊக்குனராக பொறுப்பேற்று, மாதம் 50/- ரூபாய் சேமித்து வந்தேன். மகளிர் திட்டத்தின் திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் Computer, Tally, MS office என மூன்று மாதம் காலம் பயிற்சி பெற்றேன்.

எங்கள் சுய உதவிக் குழுவை ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் இணைத்து இருந்தோம். அதன் பலனாக முதன் முதலில் சமுதாய முதலீட்டு நிதி ரூ.50,000/- எங்கள் குழுவிற்கு கிடைத்தது. இத்தொகையை நான் கடனாக பெற்று கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டர் வாங்கினேன். எனது மகன் Typing செய்து கொடுப்பான். நான் xerox எடுத்து கொடுப்பேன்.



எனது மகனின் படிப்புக்கு தேவையான பணமும், வீட்டிற்கு மாதம் ரூ. 3000/-ம் வருமானமும் கிடைக்க ஆரம்பித்தது.

எனது வளர்ச்சி என்னை போன்ற பிற பெண்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் எங்கள் பவளமல்லி சுய உதவிக் குழு மூலம் 4 உறுப்பினர்கள் இணைந்து அச்சகம் ஆரம்பித்தோம். 2021-ம் ஆண்டு ஆரம்பித்த எங்கள் அச்சகம் மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதம் வருமானம் ரூ. 6,500/- வரை கிடைக்கிறது. எங்கள்



தொழில் மென்மேலும் வளர்ந்து கடனை அடைத்து, பிறருக்கும் உதவியாக இருந்து வருகிறது. நாங்கள் பெற்ற வெற்றியின் பெருமை மகளிர் திட்டத்தினையே சேரும்" என்கிறார் முருகேஸ்வரி.

மேலும் அவர் கூறும்போது, "என்னுடைய வீடு ஓலை வீடு. நான் குழுவிலிருந்து கடன் பெற்று வீட்டைக் கட்டினேன். மகனை பொறியியல் படிக்க வைத்துள்ளேன். இதுவரைக்கும் குழுவிலிருந்து ரூ.11,50,000/- வரை கடன் பெற்றுள்ளேன். சுய உதவிக் குழுவில் ஊக்குனராக சேர்ந்த நான், 2017-ல் மாவட்ட முதன்மை பயிற்றுனராகப் பொறுப்பேற்றேன்.

இடைவரும் பலவித தடைகளைத் தகர்த்து வாழ்ந்து காட்ட எனக்கு தைரியத்தையும் தன்னம்பிக்கையும் கொடுத்த மகளிர் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- S. முருகேஸ்வரி

# சலங்கை தயாரிக்கும் சுய உதவிக் குழு



திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், அடைக்கம்பட்டி ஊராட்சியில்பூங்குயில்மகளிர்சுயஉதவிக்குழு20உறுப்பினர்களைக்கொண்டு சிறப்பாகசெயல்பட்டுவருகிறது.இக்குழுவின்உறுப்பினர்கள்சலங்கைசெய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இக்குழுவின் உறுப்பினர்கள் தொழில் துவங்கி அதை மேம்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் இக்குழுவினர் தாங்கள் மேற்கொண்டு வரும் தொழிலை மேம்படுத்த கடனுதவி கோரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் கோரிக்கை மனு அளித்தனர். அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அடைக்கம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் மூலம் பூங்குயில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ரூ.1,00,000/- கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு தொழிலுக்கான மூலப்பொருட்களை வாங்கி, சலங்கை செய்யும் தொழிலை மேம்படுத்தவும், சலங்கைகளை விற்பனை செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்ட பூங்குயில் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தற்போது மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, தங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு பூங்குயில் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# பொன்னான திட்டம்... நம் மகளிர் திட்டம்...



மு. ஜெயசித்ரா (க/பெ. முருகேசன்) ஆகிய நான், நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு வட்டாரம், திருவிடைமருதூர் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நானும் எனது கணவரும் விவசாய கூலி வேலை செய்து பிழைத்து வந்தோம். வருடத்திற்கு ஆறு மாதங்கள் மட்டுமே எங்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கும் மற்ற காலங்களில் 100 நாள் வேலை மட்டுமே எங்களுக்கு ஜீவாதாரமாக இருக்கும்.

இந்த நிலையில் எனது ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரின் மூலம் பைரவர் சுய உதவிக் குழுவை 2017ஆம் ஆண்டு ஆரம்பித்து கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, தலைஞாயிறு கிளையில் சேமிப்புக் கணக்கு துவங்கினோம். இக்குழுவில் மாதந்தோறும் ரூபாய் 500/- சேமித்து வருகிறேன். இக்குழுவின் மூலம் இதுவரை நான்கு முறை வங்கி கடன் பெற்றுள்ளேன். இக்கடன் தொகையின் மூலம் எனது கணவருக்கு தெரிந்த மோட்டார் ஆயில் கிரீஸ் போன்ற இயந்திர உயவு பொருட்களை விற்பனை செய்யும் சிறு கடையை வீட்டிலேயே துவங்கினேன்.

இக்கடையின் மூலம் நேரடி விற்பனை மற்றும் அருகாமையில் உள்ள கிராமங்களில் கடைகளுக்கும் விற்பனை செய்கிறோம். இதன் மூலம் எனது குடும்பத்திற்கு ரூபாய் 15,000/- மாத வருமானமாக கிடைக்கிறது. இப்பொழுது நிம்மதியாக குடும்பம் நடத்திடவும், எனது குழந்தைகளை படிக்க வைக்க முடிகிறது. எனது வாழ்வாதாரத்தை பொன் போல் பொலிவுற செய்த பொன்னான திட்டமான மகளிர் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றி.

- மு. ஜெயசித்ரா

## வணிகம் வளர்க...

# கன்னியாகுமரி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

## கன்னியாகுமரி மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| பேச்சிப்பாறை ஊராட்சி கூட்டமைப்பு<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>கைபேசி : 94424 72271 | தேன், மிளகு, கிராம்பு, கஸ்தூரி மஞ்சள் |  |
| பாரத் மகிளா சுய உதவிக் குழு,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>கைபேசி : 95446 32562 | கடல் சிப்பி கைவினைப் பொருட்கள் |  |
| ஜினியா மகளிர் சுய உதவிக் குழு,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>கைபேசி : 94860 11635 | பனை ஓலைப் பொருட்கள் |  |
| திருமதி மகளிர் சுய உதவிக் குழு,<br>கன்னியாகுமரி மாவட்டம்<br>கைபேசி : 76959 22870 | தேங்காய் ஓடு கைவினைப் பொருட்கள் |  |
| சாமியார் மடம் மகளிர் சுய உதவிக் குழு,<br>கன்னியாகுமரி மாவட்டம்<br>கைபேசி : 94893 74229 | வாழைநார் மிதியடிகள் |  |

DDU-GKY
Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன்
பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ்
செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள்
தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

# பாரம்பரிய மரச்சிற்பங்கள் செய்யும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்

சேலம் மாவட்டத்தில் உள்ள தம்மம்பட்டி பாரம்பரியமான மரச்சிற்பக் கலைக்கு பெயர் பெற்ற ஊர் ஆகும். மரச்சிற்பகலைக்கு தமிழ்நாட்டின் 36வது புவிசார் குறியீடு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதிலிருந்தே அதன் பாரம்பரியத்தினை நாம் அறிந்து கொள்ள முடியும். ஆரம்பகட்டத்தில் தம்மம்பட்டி பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வரை மரச்சிற்ப தொழிலில் ஈடுபட்டு வந்தனர். தற்போது 80 குடும்பங்களைச் சேர்ந்த 40 மகளிர் மற்றும் 56 ஆண்கள் மரச்சிற்பத் தொழிலினை பாரம்பரியமாக மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் மரச்சிற்பக் கலைக்கு இன்றளவும் சான்றாக இருப்பது 75 ஆண்டுகள் பழமை வாய்ந்த கலை வேலைபாடுகள் நிறைந்த தம்மம்பட்டி ஸ்ரீ உக்ர கதலி லெட்சுமி நரசிம்ம சுவாமி கோவில் தேர் ஆகும். இந்த தேர் தம்மம்பட்டி மரசிற்பக் கலைஞர்களால் 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இவர்கள் இந்து கடவுள்களின் சிலைகள், இந்து புராணக் கதைகள், தசாவதாரங்கள், இந்து கடவுள்களின் வாகனங்கள், புராண உயிரினங்கள், கோவில் கதவுகள், பூஜை மண்டபங்கள், கோயில் தேர்கள் போன்றவற்றை தேக்கு, ரோஸ்வுட், நாட்டு மரம், வாகை, மாவிலங்கை, அத்தி மற்றும் இலுப்பை போன்ற மரங்களைக் கொண்டு உருவாக்குகின்றனர். சேலம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அனைத்து பிரபலமான கோவில்களிலும் இவர்களின் வேலைபாடுகள் நிறைந்த மரச்சிற்ப கலைகளை காண முடியும்.

நுட்பமான மரச்சிற்பங்கள் ரூ.5,000/- முதல் ரூ.75,000/-வரை ஆர்டரின் பெயரில் உள்ளூர் சந்தை முதல் வெளிநாடுகளுக்கும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தஞ்சாவூர், கும்பகோணம், பண்ருட்டி பகுதிகளில் உள்ள பெரும் வியாபாரிகள் மூலம் ஆர்டர் பெறப்பட்டு மரச்சிற்பங்கள் செய்து கொடுக்கப்படுகிறது. ஆன்லைன் ஆர்டரின் பெயரிலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மாத வருமானமாக ஆண்களுக்கு குறைந்தபட்சம் ரூ.25,000/- வரையிலும் பெண்களுக்கு குறைந்தபட்சம் ரூ.15,000/- வரையிலும் கிடைக்கிறது.

மரச்சிற்ப தொழிலில் ஈடுபட்டு வரும் மகளிரை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் தலா 12 உறுப்பினர்களை கொண்டு ஸ்ரீவாரி மரச்சிற்ப மகளிர் குழு, ஸ்ரீ மீனாட்சி அம்மன் சிறப்பு மகளிர் சுய உதவிக் குழு, ஸ்ரீ மகாலெட்சுமி மரச்சிற்ப மகளிர் குழு ஆகிய மூன்று மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று மகளிர் குழுக்களுக்கும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் ஊக்குனர் பிரதிநிதி பயிற்சி மற்றும் உறுப்பினர்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தர ஆய்வு செய்யப்பட்டு சுழல் நிதியாக குழுவிற்கு தலா ரூ.10,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் தொழில் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் விதமாக 6 மாதங்கள் நிறைவில் ஸ்ரீவாரி மரச்சிற்ப மகளிர் குழுவிற்கு ரூ.1,43,000/-மும், ஸ்ரீ மீனாட்சி அம்மன் சிறப்பு மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ரூ.3,60,000/-மும் மற்றும் ஸ்ரீ மகாலெட்சுமி மரச் சிற்ப மகளிர் குழுவிற்கு ரூ.5,00,000/-மும் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தம்மம்பட்டி பகுதியில் தயாரிக்கப்படும் கலைநயமிக்க மரச்சிற்ப பொருட்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடத்தப்படும் விற்பனை கண்காட்சிகளிலும், தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி கழகமான பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் நடத்தப்படும் விற்பனைக் கண்காட்சிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. பல்வேறு விருதுகளையும் தம்மம்பட்டி சிற்ப கைவினைஞர்கள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பூந்தோட்டம் பகுதி அளவிலான கூட்டமைப்பின் வெற்றிக் கதை

காஞ்சிபுரம் நகராட்சி, வெள்ளைக்குளம் பகுதியில் 2016ஆம் ஆண்டு 10 குழுக்களைக் கொண்ட பூந்தோட்டம் பகுதி அளவிலான கூட்டமைப்பு துவங்கப்பட்டது. தற்போது இக்கூட்டமைப்பில் 30 சுய உதவிக் குழுக்கள் இணைந்துள்ளன.

மகளிர் திட்டத்தினால் தர மதீப்பீடு செய்யப்பட்டு ரூ.50,000/- சுழல் நிதியாகப் பெறப்பட்டு, அந்தத் தொகையை இக்கூட்டமைப்பில் உள்ள ஸ்ரீ அங்காளம்மன் மகளிர் சுய உதவிக் குழு, ஸ்ரீ செல்வ விநாயகர் மகளிர் சுய உதவிக் குழு, ஸ்ரீ கோகுல கண்ணன் மகளிர் சுய உதவிக் குழு, ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு மற்றும் சிவசக்தி மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றிற்கு தலா ரூ. 10,000/- வீதம் சுழல் நிதிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தசுழல்நிதியினைமூலதனமாகக்கொண்டு,மேற்படிசுயஉதவிக்குழுக்களின்உறுப்பினர்கள் சிற்றுண்டி பொருட்களான (Snacks) வத்தல், முறுக்கு, மிச்சர், கஜிரா போன்ற தின்பண்டங்களை தயாரித்து அதை சிறுசிறு கடைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றனர். மேலும் இத்தொழிலை விரிவுபடுத்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தனியாக சுழல் நிதி மற்றும் வங்கி இணைப்பு வழங்கப்பட்டு, அதன் மூலம் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் இடைந்து வருகிறது.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளிலும் மேற்படி சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன், வியாபாரிகளுக்கும், மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் தின்பண்டங்களை பேக்கிங் செய்யும் கருவிகள் வாங்கி உள்ளனர்.

தாங்கள் செய்து வரும் தொழிலை மேலும் விரிவுப்படுத்தி தற்போது வெளி மாவட்டங்களுக்கு வண்டி மூலம் தின்பண்டங்களை எடுத்து சென்று விற்பனை செய்யும் அளவிற்கு தங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு பூந்தோட்டம் பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள ஸ்ரீ அங்காளம்மன் மகளிர் சுய உதவிக் குழு, ஸ்ரீ செல்வ விநாயகர் மகளிர் சுய உதவிக் குழு, ஸ்ரீ கோகுல கண்ணன் மகளிர் சுய உதவிக் குழு, ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு மற்றும் சிவசக்தி மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# முளைகட்டிய பச்சைப் பயறு தோசை

சாதாரண பச்சைப் பயறில் இருக்கும் சத்துக்களை விட முளைகட்டிய பச்சைப் பயறில் 100 மடங்கு சத்துக்கள் அதிகம். இதில் தோசை வார்த்து சாப்பிடும் பொழுது அதன் சுவையும் அபாரமாக இருக்கும். சுவையான மற்றும் ஆரோக்கியம் நிறைந்துள்ள இந்த முளைகட்டிய பச்சைப் பயறை வைத்து எப்படி சூப்பரான சுவையில் எளிதாக தோசை சுடுவது என்பதை தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

### தேவையானப் பொருட்கள்:

பச்சைப்பயிறு - ஒரு டம்ளர், பச்சரிசி - ஒரு டம்ளர், சின்ன வெங்காயம் - 10, பச்சை மிளகாய் - இரண்டு, இஞ்சி - ஒரு இன்ச், சீரகம் - ஒரு டீஸ்பூன், கொத்தமல்லி - ஒரு கைப்பிடி, உப்பு - தேவையான அளவு.

### செய்முறை விளக்கம்:

பச்சைப்பயிறு தோசை செய்வதற்கு முதலில் பச்சைப் பயறை வாங்கி முளைகட்ட விட வேண்டும். இதற்கு ஒரு டம்ளர் அளவிற்கு பச்சைப் பயறை எடுத்து நன்கு நாலைந்து முறை கழுவி சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவும். பின்னர் சுத்தமான தண்ணீர் ஊற்றி இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் அந்த தண்ணீரை எல்லாம் வடிகட்டி விட்டு ஈரப்பதத்தோடு அப்படியே ஒரு மெல்லிய காட்டன் துணியில் கட்டி மூட்டையாக வைக்க வேண்டும். அதன் பிறகு மறுநாள் பிரித்து பார்த்தால் எல்லா பயறும் முளை கட்டி இருக்கும். வெறும் பச்சை பயறை விட முளைகட்டிய பச்சைப் பயறில் சத்துக்கள் ஏராளம் நிறைந்து காணப்படுகின்றன.

இப்பொழுது பச்சரிசி ஒரு டம்ளர் அளவிற்கு எடுத்து நன்கு கழுவி சுத்தம் செய்து 2 மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும். ஊற வைத்த அரிசியுடன் அந்த தண்ணீரையும் மிக்சர் ஜாரில் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் முளைகட்டிய பச்சைப் பயறை இதனுடன் சேர்க்க வேண்டும். ஒரு இன்ச் அளவிற்கு தோல் நீக்கிய இஞ்சி, காரத்திற்கு இரண்டு பச்சை மிளகாய், ஒரு டீஸ்பூன் அளவிற்கு சீரகம், ஒரு கைப்பிடி அளவிற்கு கொத்தமல்லி தழைகளை நன்கு கழுவி சுத்தம் செய்து சேர்த்துக் கொள்ள வேண்டும். பின் பத்து சின்ன வெங்காயத்தை தோலுரித்து சேர்த்து மிக்ஸியை இயக்கி நைசாக மாவு போல அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அரைத்த மாவில் தேவையான அளவிற்கு உப்பு சேர்த்து கரைத்து வைத்துக் கொள்ளுங்கள். அப்படியே ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.

பின் தோசைகல்லை அடுப்பில் வைத்து கல் காய்ந்ததும் மிதமான தீயில் இரண்டு கரண்டி மாவை ஊற்றி அடை போல கெட்டியாக மாவை பரப்பி தோசை போல் சுட வேண்டும். இரண்டு புறமும் நன்கு சிவக்க வெந்து வர எண்ணெய் கொஞ்சம் போல ஊற்றிக் கொள்ளவும். ரொம்ப சுவையான மற்றும் ஆரோக்கியம் மிகுந்த இந்த முளைகட்டிய பச்சை பயறு தோசை செய்வதற்கு மிகவும் எளிதாகும். இப்படியே அடிக்கடி செய்து சாப்பிட்டால் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும்.

## பயனுள்ள குறிப்புகள்

- எலுமிச்சை ஊறுகாய் தயாரிக்கும் பொழுது அதனுடன் கொஞ்சம் சர்க்கரை, மிளகாய்த்தூள், இந்துப்பு, 2 டீஸ்பூன் ஓமம் சேர்த்து நன்கு குலுக்கி பின்னர் வெயிலில் உலர வைத்து சாப்பிட, சுவையும் நன்றாக இருக்கும், ஆரோக்கியமும் பலப்படும்.
- தலையில் பேன் அதிகமாக இருந்தால் அதனை நீக்க பெரும் பாடுபட வேண்டியிருக்கும். சீயக்காய் அரைக்கும் பொழுது அதனுடன் சேர்த்து கடுக்காய் மற்றும் வேப்பிலையை காய வைத்து சேர்த்து அரைத்துக் குளித்தால் எத்தகைய பேன் தொல்லையும் நீங்கிவிடும்.
- உருளைக்கிழங்குச் சமைப்பதாக இருந்தால் அதனுடன் சேர்த்து கொஞ்சம் ஓமம் மற்றும் சீரகம் ஆகியவற்றை சேர்த்து உருளைக்கிழங்கு கறி தயாரித்தால் நல்ல வாசனையுடன் இருப்பதுடன், உருளைக்கிழங்கின் மூலம் ஏற்படும் வாய்வு நீங்கி செரிமானம் அதிகரிக்கும்.
- சுவாச பிரச்சனைகள், ஆஸ்துமா போன்ற நோய்கள் இருப்பவர்கள் தூதுவளை பூவை பசும் பாலில் சேர்த்து நன்கு காய்ச்சி வடிகட்டி பருகினால் நோயின் தீவிரம் குறையும்.
- செம்பருத்தி இலைகளை மைய அரைத்து தலை முழுவதும் தடவி 10 நிமிடம் ஊறவிட்டு அலசினால் கருகருவென கேசம் மிருதுவாக இருக்கும்.

# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் புது நிகழ்வுகளில் புத்தாக்கத் திட்டக் குறிப்புகள்!




வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தமது திட்டப் பயனாளர்களின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் தொழில் மேம்பாட்டிற்கான பல்வேறு முன்னோடித் திட்டங்களையும், அவற்றுக்கான சந்திப்புக் கூட்டங்களையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. அதன் அடிப்படையில் ஜூன் 6-7, 2023 தேதிகளில் ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற 'வளரும் இந்தியா: பகிரப்பட்ட செழுமைக்கான ஊரக வளர்ச்சிக்காக மீண்டும் திட்டமிடல்' நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப. அவர்கள்,

1. ஊரகப் பகுதிகளில் இயங்கும் நுண், குறு நிறுவனங்களுக்கு, குறிப்பாக சுயஉதவிக் குழுப் பெண்கள் நடத்தும் நிறுவனங்களுக்கு அதிக அளவில் உள்ள நிதித் தேவைக் குறித்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அறியப்படாமலிருக்கின்றன.
2. அரசு நலத்திட்டங்களான VKP-MGPக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் PLF முகவர்கள் FIs கள அளவில் நடைபெறும் செயல்பாடுகளில் முதலீடு செய்வதாக உறுதியளிப்பு.
3. நிதி கல்வியறிவு முகாம்கள் கிராமப்புற சமூகங்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன" என்ற குறிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியைப் போன்று பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைப்பையும், முன் முயற்சிகளையும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எடுத்து வருகிறது.

# வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம். திட்டப் பயனாளர்களுக்கு MGP நிதியை வழங்குகிறோம்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களுக்கான இணை மானிய நிதிக்கடன் (MGP) வழங்கலை எளிதாக்கியுள்ளது. இதற்காக பல்வேறு வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. வங்கிகளின் மூலம் வழங்கப்படும் ஒவ்வொரு இணை மானிய நிதிக் கடனிலும், 30 மானிய நிதியாகும். இந்த மானிய நிதியை வங்கிகளுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வழங்கும். இந்நிதியைப் பெற்றப்பிறகு வங்கிகள் தொழில் முனைவோர்களுக்கு MGPயை வழங்கும். இதன் மூலம் 6,620 நுண், குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களும், 500 தொழிற்குழுக்களும், 50 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளும் பயனடைந்து வருகின்றன.

### IDBI வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

2023 பிப்ரவரி 9 அன்று நடைபெற்ற 168வது மாநில அளவிலான வங்கியினர் குழு விழாவில், VKP திட்டம் IDBI வங்கியுடன் MGP நிதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, திட்டப் பயனாளர்களுக்கு இணை மானிய நிதியை வழங்கி வருகிறது.



கரூர் வைஸ்யா வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்! 2023 ஜூன் 2 அன்று VKP திட்டம் கரூர் வைஸ்யா வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, திட்டப் பயனாளர்களுக்கு இணை மானிய நிதியை வழங்கி வருகிறது.

### தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

2023 ஜூன் 7அன்று கிராமப்புற தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக MSME கடன் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, தமது திட்டப் பயனாளர்களுக்கு இணை மானிய நிதியை வழங்கி வருகிறது.

இதன் மூலம் ஊரகத் தொழில்கள் புதிய ஆற்றலைப் பெற்று வளமான முறையில் விரிவடைந்து வருகின்றன.

# தரமான முறையில் முந்திரி பருப்பு...
# நிறுவனமாக 60 மகளிருக்கு வேலைவாய்ப்பு...

என் பெயர் அன்பு, கடந்த 10 ஆண்டுகளாக கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரம், சொரத்தூர் ஊராட்சியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கும் நான் கடந்த 25 ஆண்டுகளாக அரவிந்த் கேஷியூவ் என்ற நிறுவனத்தை நடத்தி, முந்திரி பருப்பு உற்பத்தித் தொழில் செய்து வருகின்றேன். முந்திரிக் கொட்டைகளை மொத்தமாக மூட்டைகளில் வாங்கி அவற்றை மகளிர் பணியாட்கள் மூலம் உடைத்து, சீர்படுத்தி, தரம் பிரித்து விற்பனை செய்கின்றேன்.

என் நிறுவனத்தில் உற்பத்திச் செய்யப்படும் முந்திரி பருப்புகள் தேவையின் அடிப்படையில் உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கும், மொத்தமாக மதுரை மாநகரில் உள்ள வியாபாரிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றேன். நாங்கள் உற்பத்திச் செய்யும் முந்திரி பருப்பு ரகங்களை ஒரு கிலோ ரூ. 450/-, ரூ. 320/-, ரூ. 240/-, ரூ. 210/-, ரூ. 180/-, போன்ற விலைகளில் வெவ்வேறு தரத்தில் விற்பனை செய்கின்றோம். சில்லரையில் கேட்பவர்களுக்கு எங்கள் நிறுவனத்தின் வணிக அடையாளப் பெயர் கொண்ட பாக்கெட்டுகளில் அடைத்துக் கொடுக்கின்றோம். என் நிறுவனத்தில் பகுதி நேரங்களில் 60 மகளிர் வரை பணி செய்கின்றனர். முழு நேரப்பணியில் இரண்டு ஊழியர்கள் உள்ளனர்.

என் தொழில் நன்றாக இயங்கி வரும் நிலையில், பெருகி வரும் சந்தையின் தேவைக்கேற்ப உற்பத்தியை அதிகரிக்கவும், விரைவாக சரக்குகளை சந்தைக்கு அனுப்பவும் நவீன முந்திரி பருப்பு உடைப்பு மற்றும் தரம் பிரிக்கும் இயந்திரங்களை வாங்க எண்ணியிருந்தேன்.

இந்த வேளையில் எங்கள் சுய உதவிக் குழு மூலமாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொழில் விரிவாக்கத்திற்கு இணை மானிய நிதி (MGP) வழங்குவதை அறிந்து எங்கள் சுய உதவிக் குழுவின் மூலமே விண்ணப்பித்தேன். ஏமுஞ திட்டத்தினர் எனது நிறுவனத்தை ஆய்வு செய்து எனக்கு ரூ. 5 இலட்சம் இணை மானிய நிதியை 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வழங்கினர். (இந்த ரூ. 5 லட்சத்தில் ரூ. 1.5 லட்சம் மானிய நிதி என்பதில் எனக்கும் பெரும் மகிழ்ச்சியாகும்) இந்த நிதியுடன் எனது தொகையையும் சேர்த்து ரூ. 12 இலட்சம் மதிப்புள்ள முந்திரி பருப்பு உடைப்பு மற்றும் தரம் பிரிக்கும் நவீன இயந்திரத்தை வாங்கினேன். இதன் மூலம் தற்பொழுது அதிகமாக முந்திரி பருப்புகளை உற்பத்தி செய்வதுடன், விரைவாக சந்தைக்கும் அனுப்பி வைக்கின்றேன். ‘

எனினும், என் தொழிலின் மேற்கொண்ட வளர்ச்சிக்கு இயந்திரக் கடனுதவி மட்டுமல்லாது மூலப்பொருளான முந்திரிக் கொட்டைகளை வாங்கவும் கடனுதவி வழங்கினால் எனக்கும் நிறுவனத்திற்கும், என் நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பைப் பெறும் 60 மகளிருக்கும் பெரும் ஆதரவாக இருக்கும். இதை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினரிடம் தெரிவித்துள்ளேன், அவர்களும் எனக்கு உதவி செய்வதாக தெரிவித்துள்ளனர்.

என் நிறுனத்தின் மூலம் அனைத்து செலவுகளும் போக எனக்கு மாதம் ரூ. 10-12 ஆயிரம் வரை லாபம் கிடைக்கின்றது.



# நலமான கறவை மாடு வளர்ப்பைப் பயின்றோம். தரமான பால் உற்பத்தியை அடைந்தோம்.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம், பெரியகோட்டை ஊராட்சியில் பல வருடங்களாக கறவை மாடு வளர்த்து வருகின்றோம். கடந்த 2021 ஆம் ஆண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் 60 நபர்களை (55 மகளிர் 5 ஆண்கள்) ஒன்று சேர்த்து செம்பருத்தி பால் உற்பத்தியாளர் குழுவைத் தொடங்கினோம். அதன்பிறகு சமுதாயப் பண்ணைப் பள்ளியின் மூலம் எங்களுக்கு நலமான முறையில் கறவை மாடு வளர்ப்பதற்கான பயிற்சி 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் எங்களது ஊராட்சியிலேயே வழங்கப்பட்டது.

ஆரம்பக்காலம் முதல் தெரிந்த அளவில் விழிப்புணர்வு இல்லாமல் கறவை மாடு மட்டும் வளர்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், சமுதாயப் பண்ணைப் பள்ளியில் நலமான முறையில் கறவை மாடுகளை வளர்ப்பதற்கான தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. அதில் மாடுகளுக்கு கொட்டகை அமைத்தல், குறைந்த செலவில் மாட்டுத் தீவனம் உற்பத்தி மற்றும் வழங்கும் முறை, நோய் தடுப்பு முறை, சினைப்பருவத்தில் சினை ஊசிப் போடுதல், வருடத்திற்கு 2 முறை கணைய நோய்க்கான தடுப்பூசி போடுதல், 3 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் மருந்து அளித்தல் மற்றும் காப்பீட்டுத் திட்டம் வரை நலமான பால் பண்ணைக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டோம்.

மேலும் எங்கள் கறவை மாடுகளின் மூலம் உற்பத்தி ஆகக்கூடிய பாலை எவ்வாறு விற்பனை செய்வது என்று தெரியாமல் இருந்த எங்களுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் எங்கள் குழுவை ஆவின் பால் நிறுவனத்தில் இணைத்து, பால் கூட்டுறவு சங்கம் அமைத்து கொடுத்தார்கள். தற்பொழுது அதன் மூலம் எங்களுடைய பால் விற்பனையை சிறப்பான முறையில் செய்து வருவதுடன் எங்களுக்கு நிலையான வருவாயையும் ஈட்டி வருகின்றோம்.

எங்கள் சமுதாயப் பண்ணைப் பள்ளியின் மூலம் கறவை மாடு வளர்ப்புக்கு கடனுதவி கேட்டோம். அதன் அடிப்படையில் எங்கள் குழுவில் உள்ள 26 உறுப்பினர்கள் தாட்கோ மூலம் 1 நபருக்கு ரூ. 1,07,500/- வீதம் (உறுப்பினர் பங்களிப்புத் தொகை ரூ. 5,000/- மற்றும் திட்டத்தின் மானியத் தொகை ரூ. 32,250/-) ஆகும். மொத்தம் 26 நபர்களுக்கு ரூ. 27,95,000/- வாங்கிக் கொடுத்தனர்.

அதில் நாங்கள் ஆளுக்கு 2 மாடுகள் வாங்கி பால் உற்பத்தியை எங்கள் ஊராட்சியில் செய்து வருகின்றோம். இதனால் எங்கள் ஊரில் மட்டும் 300 லிட்டர் பாலை தினமும் ஆவின் நிறுவனத்திற்கு அனுப்பி வருகின்றோம். இதனால் எங்களுடைய குழு உறுப்பினர்களின் வருமானம் சராசரியாக மாதம் ரூ. 11,000/- கிடைக்கின்றது. இதில் கடன் திருப்ப மாதத்தவணை ரூ. 3000/- போக மீதம் ரூ.7000-8000 வரை ஒவ்வொருவரும் சேமிக்கின்றோம்.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எங்களுடைய சமுதாயப் பண்ணைப் பள்ளி நிறைவு நாள் கொண்டாடப்பட்டது. அதில் பால் மதிப்புக் கூட்டுப் பொருட்களைத் தயாரிக்க உற்பத்தியாளர்கள் அனைவரும் கற்றுக்கொண்டு அதனை செய்து காண்பித்து உலக பால் தின விழாவை கொண்டாடினோம். அது எங்களுக்கு மனமகிழ்ச்சியையும் உற்சாகத்தினையும் அளித்தது.

எங்களுக்கு அனைத்து விதங்களிலும் ஒத்துழைப்பு அளித்து பயிற்சி கொடுப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட SPARK அமுதா என்பவர் சிறந்த முறையில் சமுதாயப் பண்ணைப் பள்ளியை செயல்படுத்தினார். சமுதாயப் பண்ணைப் பள்ளியில் கொடுத்த பயிற்சி உபகரணங்கள், கால்நடை மருத்துவ முகாம் என அனைத்தும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இதனை ஏற்படுத்திக் கொடுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் எங்கள் குழுவின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



# அழகழகான கொலு பொம்மை தயாரிப்பு... அனைத்து இளைஞர்களுக்கும் பயிற்றுவிப்பு...

என் பெயர் துளசிங்கம், (வயது 28), கடலூர் மாவட்டம், அண்ணா கிராமம் வட்டம், திருத்துரையூர் கிராமத்தில் வசிக்கும் நான் 18 ஆண்டுகளாக கொலு பொம்மை தயாரிக்கும் தொழில் செய்து வருகின்றேன். எங்கள் ஊரிலுள்ள ஒரு நிறுவனத்தில் 10 ஆண்டுகளாக இந்தத் தொழிலை கற்று செய்து வந்தேன். என் திருமணத்திற்குப் பிறகு RDS துளசிங்கம் ஆர்ட் ஒர்க்ஸ் என்ற பெயரில் நிறுவனம் தொடங்கி 8 ஆண்டுகளாக தனியாக நடத்தி வருகின்றேன்.

என் நிறுவனத்தில் விழாக்காலங்களுக்கு பயன்படுத்தப்படும் கொலு பொம்மைகளை உற்பத்திச் செய்கின்றேன். இதில் கிருஷ்ண ஜெயந்திக்கான பொம்மைகள், கிறுஸ்துமஸ்ஸிற்கான பொம்மைகள், நவராத்திரி கொலு பொம்மைகள் போன்றவற்றை உற்பத்திச் செய்கின்றேன். மேலும் விநாயகர் சதுர்த்தி காலத்தில் தேவையின் அடிப்படையில் அதிகமான விநாயகர் பொம்மைகளை உற்பத்திச் செய்து விற்று வருகின்றேன். இந்த பொம்மைகள் காஞ்சிபுரம், சென்னை, வையாபுரி பட்டணம், கடலூர் வண்டிப்பாளையம் ஆகிய ஊர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடந்த 2022 ஆம் ஆண்டு எங்களது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர் பவித்ரா அவர்கள் என்னிடம் அணுகி "வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பாக இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்குமாறு" கேட்டார். அப்பொழுது வேலை அதிகமாக இருந்ததால் நான் தயங்கியபடி "பிறகு பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டேன்.

தற்பொழுது 2023ஆம் ஆண்டு ஏப்ரல், மேமாதத்திலிருந்து என் நிறுவனத்தின் மூலம் சமுதாயத் திறன் பள்ளி (CSS) பயிற்சியாக, கொலு பொம்மைகளைத் தயாரிக்கப் பயிற்றுவித்து வருகின்றேன். இதற்காக நான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் CSS பயிற்றுநராக பொறுப்பேற்று செயல்பட்டு வருகின்றேன். இந்தப் பயிற்சிக்காக எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ஊதியம் வழங்கப்படுவதுடன் பயிற்சிக்கு வேண்டிய பயிற்சிப் பெட்டகங்கள் மற்றும் உபகரணங்கள் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

என்னுடைய பயிற்சி நிறுவனத்தில் ITI மாணவர்கள் 10 பேரும், VKP திட்டத்தின் மூலமாக பல்வேறு மகளிர் மற்றும் ஆண் பயிற்சியாளர்களும் பயிற்சிப் பெற்று வருகின்றனர். என் நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர் 10 நபர்கள் (8 மகளிர் 2 ஆடவர்) தற்பொழுது என்னிடமே நிரந்தரமாக வேலை செய்ய விருப்பப்பட்டு பணி செய்து வருகின்றனர்.

மேலும் என் நிறுவனத்தில் உற்பத்திச் செய்யப்படும் பொம்மைகளுக்கு அழகழகாக வண்ணமிட்டு தரமுயர்த்த எண்ணியுள்ளேன். இதற்காக என் நிறுவனத்தை பெரிய அளவிலான இட வசதியுடன் விரிவாக்க திட்டமிட்டுள்ளேன். இதற்காக கடலூர் அங்குச்செட்டி பாளையத்தில் ஒரு பெரிய இடத்தை குத்தகைக்கு எடுத்துள்ளேன். நிறுவன விரிவாக்கத்திற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் இணை மானிய நிதிக்கு விண்ணப்பித்துள்ளேன். அந்த நிதி கிடைத்ததும் பொம்மைகள் செய்வதற்கான டைகள் மற்றும் இயந்திரம் வாங்கி தொழிலை பெரிதாக நடத்தவும், இளைஞர்களுக்கு பெரிய அளவில் பயிற்சி அளிக்கவும் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றேன்.



# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## மருதம் கீற்று வியாபாரம் கூட்டுப் பொறுப்பு குழு

டாக்டர். **தரேஸ் அஹமது,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செங்கல்பட்டு மாவட்டத்தில் 57.கொளத்தூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் மருதம் கீற்று வியாபாரம் கூட்டுப் பொறுப்பு குழு உறுப்பினர்கள் வாழ்வாதாரம் அடைந்த திருமதி. உஷா, திருமதி. கலைவாணி, திருமதி. துளசி, திருமதி. தனலட்சுமி, திருமதி. தமிழ்செல்வி ஆகியோர் கூறுகையில், "கீற்று முடையும் இடத்தில் கூலிக்கு வேலைக்குச் சென்றோம். கூட்டமைப்பில் இருந்து தொழில் செய்வதற்கு கடன் தொகை வழங்குவதாக தெரிவித்தனர். அதன்பேரில் மகளிர் குழு உறுப்பினர்களான நாங்கள் 5 நபர்கள் சேர்ந்து மருதம் கீற்று வியாபாரத் தொழிலுக்கு தங்களது பங்குத் தொகை ரூ.7500/- செலுத்தி. தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் தமிழ்நாடு கிராம வங்கியில் ரூ.1,42,500/- கடன் பெற்று கீற்று வியாபாரம் குறு தொழில் துவங்கினோம்.

தற்போது நாங்கள் பெற்ற கடன் தொகையை அசலும் வட்டியுமாக ரூ.1,42,500/- முழுவதுமாக திரும்பச் செலுத்தியுள்ளோம். ஒவ்வொரு மாதமும் இலாபமாக ஒரு உறுப்பினருக்கு ரூ.3000/- வரை வருமானம் பெறுகிறோம். இந்த வருமானத்தைக் கொண்டு எங்கள் குழந்தைகளின் கல்வி செலவை நங்களே செலுத்தி விடுகிறோம். மேலும், நாங்கள் மாதந்தோறும் 3-ஆம் தேதி வங்கியில் கடன் தொகையை செலுத்தி வருகிறோம். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததைவிட தற்போது எங்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதாரமும் உயர்ந்துள்ளது. எங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு மருதம் கீற்று வியாபாரம் கூட்டுப் பொறுப்பு குழு உறுப்பினர்கள் அனைவரும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று குறிப்பிட்டனர்.

# இயற்கைக் கழிவுகளிலிருந்து எரிவாயு உற்பத்திக் கலன்

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டாரம், மும்பாலை ஊராட்சி பட்டாங்காடு மீனவ கிராமத்தை சேர்ந்தவர் திருமதி. தேவி, (க/பெ. சிதம்பரம்). இவர் தென்றல் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறார். பெண்களின் மாதாந்திர குடும்ப செலவுகளில் ஒன்று எரிவாயு கொள்முதல் செய்வது. அதற்கென பெரும் தொகையை செலவு செய்து வந்த சூழ்நிலையில் அவர்களின் செலவுகளை குறைத்து வருமானத்தை சேமிக்கும் நோக்கில் அவர்களின் வீட்டிலேயே கிடைக்கும் இயற்கை கழிவுகளிலிருந்து குறைந்த முதலீட்டிலும் திட்ட நிதியின் உதவியாலும் ரூ.24,900/- மதிப்பிலான இயற்கை எரிவாயு உற்பத்தி கலன் இவர் வீட்டில் நிறுவப்பட்டது.



இந்தக் கலன் மீது பயனாளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.8000/- மட்டுமே. இந்த எரிவாயு கலனை பயன்படுத்தி அவர்களின் தினசரி எரிவுாயு பயன்பாடு குறைந்தது. மேலும் இந்த இயற்கை எரிவாயு கலனை பயன்படுத்தி சமைக்கும் உணவுகள் இயற்கையான சுவையையும் மனத்தையும் தருகிறது.

இதைப்பற்றி தேவி அவர்கள் கூறுகையில் "இந்த எரிவாயு கலனை பயன்படுத்தி சமைப்பதால் என்னுடைய செலவுகள் கணிசமாக குறைந்துள்ளது. அது மட்டுமல்லாமல் வீட்டில் மீதமாகும் இயற்கை கழிவுகளை தெருக்களிலும், குப்பைத் தொட்டிகளிலும் கொட்டாமல் எரிவாயுகலனில் செலுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைகிறது. எரிவாயு கலனிலிருந்து வெளியேறும் இயற்கையான கழிவு நீர் பயிர்களுக்கும், மரங்களுக்கும் செடிகளுக்கும் வீரியமான உரமாக மாறி நன்கு பலனை தருகிறது. எனக்கு இந்த எரிவாயு கலனைத் தந்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கும், மும்பாலை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்குடன் செயல்படும் ஸ்ரீ பவானியம்மன் கூட்டுப் பொறுப்புக் குழு

விழுப்புரம் மாவட்டம், கூனிமேடு கீழ்புத்துப்பட்டு ஊராட்சியை சேர்ந்த கெங்கை நகர் பகுதியில் ஸ்ரீ பவானியம்மன் வேஸ்ட் பாட்டில் கூட்டுப் பொறுப்பு குழு தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மூலம் தொடங்கப்பட்டது. இக்குழுவிற்கு பல்லவன் கிராம வங்கி, அனுமந்தை கிளையில், 5 பயனாளிகளுக்கு கடன் உதவியாக ரூ.2,50,000/- வழங்கப்பட்டது.



இக்கூட்டுப் பொறுப்பு குழுவில் துவக்கம் முதல் 5 பயனாளிகளும் ஒற்றுமையாக இருந்து தொழில் புரிந்து வருகின்றனர். இக்குழுவினர் பெற்ற கடனை மாதம் தவறாமல் செலுத்தி வருகின்றனர். இக்குழுவில் உள்ள பயனாளிகள் அவர்களின் நிரந்தர வருமானத்தைக் கொண்டு தங்களது பிள்ளைகளின் கல்வி, இருப்பிடம், வாழ்வாதாரம் ஆகியவற்றில் வளர்ச்சிஅடைந்துள்ளனர்.

கீழ்புத்துப்பட்டு ஊராட்சி கிராமத்தில் உள்ள பகுதியில் தேவையில்லாத மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை சில்லறை விற்பனையாளர்களிடம் வாங்கி பிறகு மொத்தமாக மறுசுழற்சிக்காக பாண்டிச்சேரியில் விற்பனை செய்கின்றனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்தொழிலை செய்வதால் அவர்களின் வாழ்வாதார தரம் உயர்ந்து உள்ளது.

இத்தொழில் துவங்க ஊக்கம், பயிற்சி, முதலீடு, வழிகாட்டுதல் ஆகியவற்றை அளித்து தங்களின் குடும்ப வாழ்வாதாரம் நிலைத்தத் தன்மை அடைய உதவி செய்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு ஸ்ரீ பவானியம்மன் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஸ்ரீ சங்கரா ஃபேன்ஸி ஸ்டோர்



விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்பட்டு வரும் கூனிமேடு ஊராட்சியில் வசிக்கும் திருமதி. கோமதி என்பவர் இப்பகுதியில் செயல்படும் தமிழ் மகள் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளமையால் வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று திட்டத்தின் சிறப்பு பயனாளி தொழில் மேம்பாட்டிற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக ரூ. 18,000/- கடன் தொகை மற்றும் பயனாளி விளிம்புத் தொகை ரூ. 2,000/- என மொத்தம் ரூ. 20,000/- மற்றும் அவரிடமிருந்த தொகை ஆகியவற்றை சேர்ந்து, கூனிமேட்டில் “ஸ்ரீ சங்கரா பேன்ஸி ஸ்டோர்” என்ற கடையை ஆரம்பித்தார். தனது கடைக்கான பொருட்களை பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய ஊர்களில் வாங்கி விற்பனை செய்வதன் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகிறார். தான் பெற்ற கடன் தொகை முழுவதையும் திரும்ப செலுத்தி விட்டார்.

தற்போது சிறப்பாக தனது கடையை நடத்தி வரும் திருமதி. கோமதியை தமிழ் மகள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டி வருகின்றனர். தன்னுடைய வாழ்வாதாரம் மேம்பாடு அடையக் காரணமாக இருந்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. கோமதி.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,31,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

## மகளிரின் படைப்பினில்

# ஆகாயத் தாமரை

## பொருளில் வந்தது...!



எங்கள் தொழிற்குழுவிற்கு
**VKP** திட்டத்தின் மூலம்
தொழிற் பயிற்சி மற்றும் தொடக்க நிதி

ரூ. **75,000** வழங்கி
ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| நிறுவனப் பெயர் | : | ஆகாயத் தாமரை மலர்கள் உற்பத்தி தொழிற்குழு |
| மாவட்டம் | : | தூத்துக்குடி |
| வட்டாரம் | : | ஆழ்வார்திருநகரி |
| ஊராட்சி | : | மேல ஆத்தூர் |

**உற்பத்திப் பொருட்கள்:**

- தேனீர் மேசை வில்லைகள்
- யோகாசனப் பாய்கள்
- பழத்தட்டுகள்
- விளக்குத் தாங்கி
- கைப்பை
- பெண்களுக்கான பணப்பை

இவர்களது உற்பத்திப் பொருட்களை
வாங்க தொடர்புகொள்ளவும்

**93446 91356**

# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org

VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th July 2023 Posted at Patrika Channel, Egmore.



எங்கள் குழுவோட உற்பத்தி பொருட்களின் சந்தை வாய்ப்பு உள்ளூர் மட்டும் இல்லைங்க தமிழ்நாடு முழுவதும் சில நேரங்கள்ல இந்திய அளவிலும் Exhibition –ல வச்சி சேல்ஸ் பன்றோம். நாடு தழுவிய அளவுல எங்கள் பொருட்களை பிரபலப்படுத்தவும் விற்பனை செய்யவும் வாய்ப்பு வழங்குன TNULM–க்கு நன்றி.

அனைவரிடத்திலும் திறமைகள் கொட்டிக் கிடக்கின்றது அதனை கண்டறிந்து இந்த உலகிற்கு வெளிகாட்டும் பொழுதுதான் சாதனையாளர்களாக ஆகின்றனர்

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

## சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID)

1. சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்
2. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்
3. சுய உதவிக்குழு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை மற்றும் ஆளுமை பயிற்சி வழங்குதல்

## சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP -I)

1. தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வட்டி மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்குதல்
2. குழு தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி மானியத்துடன் கடன் வழங்குதல்
3. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளில் மூலம் வட்டி மானியத்துடன் கடன் வழங்குதல்